**நவம்பர் – 05**

# TNPSC துளிகள்

- இந்திய இராணுவமானது, தெற்குப் படைப் பிரிவின் கீழ் உள்ள பாலைவனப் பகுதியில் 'வாயு சமன்வய்-II' என்ற ஒரு பெரிய ஆளில்லா விமான மற்றும் ஆளில்லா விமான எதிர்ப்புப் பயிற்சியை நடத்தியது.
- லிதுவேனிய-உக்ரேனிய எழுத்தாளர் ஜரோஸ்லாவாஸ் மெல்னிகாஸ் எழுதிய 'Antim Din' (இந்தியில்) என்ற புகழ்பெற்ற லிதுவேனிய புதினத்தின் இந்தி மொழிபெயர்ப்பை சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.
- பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கில் 120 கோடி ரூபாய் மதிப்பில் கம்பிவடத் தொங்கூர்தி திட்டத்திற்கு தேசியப் புலனாய்வு முகமை (NIA) ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராடிய பழங்குடியின வீரர்களின் வீரம் மற்றும் தியாகங்களைக் காட்சிப்படுத்தும் வகையில், பழங்குடியினச் சுதந்திர வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் டிஜிட்டல் அருங்காட்சியகம் ஆனது சத்தீஸ்கரில் உள்ள நவ ராய்ப்பூர் அடல் நகரில் நிறுவப்பட்டுள்ளது.
- பிரதமர் நவ ராய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள சத்தீஸ்கர் சட்டமன்றத்தின் புதியக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.
- மெக்ஸிகோ நகரம் ஆனது, வண்ணமயமான உடைகள், மிதவைகள் (காட்சி வாகனங்கள்) மற்றும் பாரம்பரியப் பிரசாதங்களுடன் 1.5 மில்லியன் பார்வையாளர்கள் பங்கேற்ற 2025 ஆம் ஆண்டிற்கான அதன் இறந்தோர் நாள் அணி வகுப்பை நடத்தியது.
- புற்றுநோய் இறப்புகளுக்கு முக்கியக் காரணமாக உள்ள நுரையீரல் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, நுரையீரல் புற்றுநோய் மாதம் ஆனது உலகளவில் நவம்பர் மாதம் அனுசரிக்கப்படுகிறது.
- நனி சைவம் அடிப்படையிலான வாழ்க்கை முறைகள் மற்றும் விலங்கு நலனை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 01 ஆம் தேதியன்று உலக நனி சைவ தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Celebrating 80 Years of Vegan Living" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## டிரெக் தமிழ்நாடு முன்னெடுப்பு

- தமிழ்நாடு முழுவதும் பாதுகாப்பான, வழி காட்டப்பட்ட மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலான மலையேற்ற அனுபவங்களை வழங்குவதற்காக ட்ரெக் தமிழ்நாடு முன்னெடுப்பு 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- கடந்த ஆண்டில், 1,400 மாணவர்கள் மற்றும் 150 சர்வதேசப் பார்வையாளர்கள் உட்பட 15,500 மலையேற்ற வீரர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வனப் பாதைகளில் பயணம் மேற்கொண்டு இயற்கை அழகைக் கண்டு களித்தனர்.
- மிகவும் பிரபலமான மலையேற்றப் பாதைகள் ஏலகிரி-சுவாமிமலை (2,209 மலையேற்ற வீரர்கள்), குடியம் குகைகள் (1,743), பரலியார் (982), பார்சன்ஸ் பள்ளத்தாக்கு-முகூர்த்தி பகுதி (835), மற்றும் அவலாஞ்சி-கோலாரிபெட்டா (729) ஆகியவையாகும்.

- இந்த முன்னெடுப்பு ஆனது, தேர்ந்தெடுக்கப்பட்ட மலையேற்றப் பாதைகளின் எண்ணிக்கையை 40 முதல் 50 ஆக விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்துடன் (TTDC) இணைந்து ஒருங்கிணைந்தச் சுற்றுச்சூழல் சார் சுற்றுலா தொகுப்புகளைத் தொடங்க உள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, TTF சென்னை 2025 நிகழ்வில் 'மிகவும் பிரத்தியேக தயாரிப்பு விருது' மற்றும் தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2025 நிகழ்வில் 'சிறந்த சூழலியல் சுற்றுலா சேவை வழங்குநர் விருது' ஆகியவற்றைப் பெற்றது.
- அனைத்து மலையேற்றங்களும் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் சம நிலையை உறுதி செய்யும் வகையில், 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு (மலையேற்ற ஒழுங்குமுறை) விதிகளின் படி நடத்தப்படுகின்றன.




# தேசியச் செய்திகள்


## JAI உத்தி




- இந்தியாவின் தெற்குப் படைப்பிரிவானது, கூட்டு, ஆத்மநிர்பாரதம் மற்றும் புதுமை (Jointness, Atmanirbharta, and Innovation-JAI) பற்றிய அதன் உத்தி சார் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளது.
- திரிசூல் பயிற்சியின் ஓர் அங்கமாக பாலைவனப் பகுதியில் சுதர்சன் வாயு சஞ்சார் பயிற்சி என்ற குறிப்பிடத்தக்க கூட்டு வான் வழி பாதுகாப்புப் பயிற்சியை நடத்தியது.
- தடையற்றச் செயல்பாட்டு ஒருங்கிணைப்பிற்காக வேண்டி ஆயுதப்படைகளின்

மூன்று பிரிவுகளையும் ஒருங்கிணைப்பது, உள்நாட்டு பாதுகாப்பு துறை உற்பத்தியை வலுப்படுத்துவது மற்றும் இந்தியாவின் இராணுவக் கோட்பாட்டில் புதுமை மற்றும் தொழில்நுட்பத்தை உட்பொதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## GRIHA உச்சி மாநாடு




- 17வது GRIHA (ஒருங்கிணைந்த வாழ்விட மதிப்பீட்டிற்கான பசுமைத் தரமிடல்) உச்சி மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- "Innovate to Act for a Climate Resilient World" என்ற கருத்துருவுடன் நடைபெற்ற இந்த உச்சி மாநாடு ஆனது, இந்தியாவின் கட்டமைக்கப்பட்ட சூழலுக்கான மேம்படுத்தக் கூடிய பருவநிலை தீர்வுகளை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த உச்சி மாநாடு ஆனது கொள்கை, தொழில்நுட்பம் மற்றும் சந்தை உத்திகள் மூலம் இந்தியாவின் கட்டமைக்கப்பட்ட சூழலுக்கான பருவநிலை தகவமைவுத் தீர்வுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளில் நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையிலான பருவநிலை உத்திகளை ஊக்குவிப்பதற்காக GRIHA சபையினால் இந்த உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் மின்சார இராணுவ வாகனம் – VEER




- பெங்களூருவின் பிரவைக் டைனமிக்ஸ் நிறுவனமானது, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட VEER EV எனப்படும்

இந்தியாவின் முதல் மின்சார வாகனத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ❖ இந்த வாகனம் ஆனது ரேடாருக்குப் புலப்படாதத் திறன்கள், வெவ்வேறு நிலப் பரப்புகளில் இயங்கும் திறன் மற்றும் இராணுவப் பயன்பாட்டிற்கான விரைவான கள-பழுதுபார்ப்பு தயார்நிலையைக் கொண்டுள்ளது.
- ❖ VEER EV ஆனது பாலைவனங்கள், மலைகள் மற்றும் காடுகளில் அமைதியாக சத்தமின்றி இயங்கக் கூடியது என்பதால், குறைந்த சத்தம் மற்றும் வெப்ப உமிழ்வு மூலம் கண்டறிதலைத் தடுக்கிறது.
- ❖ இது பாதுகாப்புத் துறையின் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கான பாதுகாப்புத் துறையின் புதுமை உருவாக்கத்தில் சிறந்து விளங்குதல் (iDEX) விருதை வென்றது.

## ‘ஆபார்’ இயங்கலை வழி பண்டக சாலை




- ❖ இந்திய இரயில்வே நிர்வாகமானது, புதிதாக தொடங்கப்பட்ட Aabhar/ஆபார் இயங் கலை வழி பண்டக சாலைக்கு ஆதரவளிக்க உள்ளது.
- ❖ இது பழங்குடியினர், கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களால் தயாரிக்கப் பட்ட பரிசுப் பொருட்களை காட்சிப்படுத்துகிறது.
- ❖ இந்த பண்டக சாலைகள் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) மற்றும் புவி சார் குறியீடு (GI) திட்டங்களின் கீழ் தயாரிப்புகளை ஊக்குவிக்கிறது.
- ❖ அரசு இணைய சந்தையில் (GeM) நடத்தப்படுகின்ற ஆபார் ஆனது, மத்தியக் குடிசை தொழில்களின் பேரங்காடி (CCIE), காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் (KVIC) மற்றும் பிற மாநில மற்றும் மத்திய கைவினைப் பொருட்கள் பேரங்காடிகளிலிருந்து பொருட்களைப் பெறுகிறது.
- ❖ இரயில்வே நிர்வாகம் முன்னதாக உள்ளூர் கைவினைப்பொருட்கள், கைத்தறி மற்றும் உள்நாட்டு தயாரிப்புகளை அதன் வலையமைப்பு முழுவதும் காட்சிப்படுத்த ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு (OSOP) திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

## சர்வதேச உத்தி சார் ஈடுபாட்டு நிகழ்வு




- 3வது சர்வதேச உத்தி சார் ஈடுபாட்டு நிகழ்வானது (IN-STEP) புது டெல்லியில் நடைபெற்றது.
- IN-STEP என்பது இந்தியா மற்றும் வெளிநாட்டு நட்பு நாடுகளைச் சேர்ந்த மூத்த தேசியப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான ஓர் உத்தி சார் பேச்சுவார்த்தை தளமாகும்.
- பருவநிலை மாற்றம், செயற்கை நுண்ணறிவு, பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாடு போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள உத்தி சார் ஒத்துழைப்பில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்தியது.
- IN-STEP என்பது உத்தி சார் சிந்தனையாளர்களை ஊக்குவிப்பதையும், உலகளாவிய தெற்கு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியாவின் முன்னணி சூரியகாந்தி எண்ணெய் வழங்கீட்டு நாடு

- ரஷ்யா, இந்தியாவின் மிகப்பெரிய சூரியகாந்தி எண்ணெய் வழங்கீட்டு நாடாக உக்ரைனை முந்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் சுமார் 175,000 டன்னிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 2.09 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதுடன், ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி கடந்த நான்கு ஆண்டுகளில் பன்னிரண்டு மடங்கு அதிகரித்து உள்ளது.
- இந்தியாவின் மொத்த இறக்குமதியில், 2021 ஆம் ஆண்டில் சுமார் 10 சதவீதமாக இருந்த ரஷ்ய சூரியகாந்தி எண்ணெயின் பங்கு 2024 ஆம் ஆண்டில் 56% ஆக அதிகரித்துள்ளது.
- சூரியகாந்தி எண்ணெய் ஆனது இந்தியாவில் அதிகம் நுகரப்படும் சமையல் எண்ணெயில் மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதோடு அதில் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

- விலை உயர்வு காரணமாக 2025 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி 13% குறையக் கூடும் என்றாலும், ரஷ்யாவின் பங்கு 55-60% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## பாதுகாப்புக் கூட்டாண்மை - இந்தியா மற்றும் அமெரிக்கா




- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பாதுகாப்புத் துறையில் உத்தி சார் ஒத்துழைப்பு மற்றும் கூட் டுறவினை வழிநடத்த 10 ஆண்டு காலக் கட்டமைப்பில் கையெழுத்திட்டுள்ளன.

- மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 12வது ASEAN/ஆசியான் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்திப்பு-பிளஸ் (ADMM-பிளஸ்) நிகழ்வின் போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இருதரப்பு பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இரு நாடுகளும் மீண்டும் உறுதிப்படுத்தின மற்றும் மேற்கொள்ளப் பட்டு வரும் பாதுகாப்புத் துறை சார் ஈடுபாடுகளை மதிப்பாய்வு செய்தன.
- அடுத்தப் பத்தாண்டுகளில் பாதுகாப்புத் துறையின் கூட்டாண்மையை பரிமாற்றுவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் இந்தக் கட்டமைப்பு ஓர் ஒருங்கிணைந்த கொள்கை வழிகாட்டலை வழங்குகிறது.
- இராணுவப் பயிற்சிகள், உளவுத்துறை பகிர்வு, பாதுகாப்புத் தொழில்துறை மற்றும் தொழில்நுட்பக் கூட்டாண்மைகள் மற்றும் உத்தி சார் ஒருங்கிணைப்புக்கான கூட்டு வழிமுறைகள் ஆகியவை ஒத்துழைப்பு மேற்கொள்ள உள்ள துறைகளில் அடங்கும்.


## அமெரிக்க அணுசக்தி சோதனைத் திட்டம்




- அமெரிக்கா அதன் அணு ஆயுத அமைப்புகளில் சோதனைகளை நடத்த திட்டமிட்டு உள்ளது.
- அணு வெடிப்புகள் இடம் பெறாத இந்தச் சோதனைகளில் அமைப்புகளின் செயல்பாடு, வடிவியல் மற்றும் விநியோக வழிமுறைகளை ஆராயப்படும்.
- புதிய அமைப்புகளை மதிப்பீடு செய்வதும் மாற்றீடு அணு ஆயுதங்கள் திறம்படச் செயல்படுவதை உறுதி செய்வதும் இதன் நோக்கமாகும்.
- அமெரிக்கா முன்னர் 1960, 1970 மற்றும் 1980 ஆகிய ஆண்டுகளில் அணுசக்தி சோதனை வெடிப்புகளை நடத்தியது என்ற நிலையில் மேலும் தற்போது வெடிப்பு விளைவுகளை கணிக்க மேம்பட்ட மாதிரியாக்க/உருவகப்படுத்துதல்களைப் பயன்படுத்துகிறது.
- உலகளாவிய அணுசக்தி முன்னேற்றங்களைக் கண்காணித்தல் (ரஷ்யா, சீனா, வட கொரியா ஆகியவற்றின்) மற்றும் உத்தி சார் தயார்நிலையைப் பேணுதல் ஆகியவற்றினை இந்தச் சோதனைக்கான காரணங்களாக அதிகாரிகள் மேற்கோள் காட்டினர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## RAD52 புரதம்




- அயோவா பல்கலைக்கழகத்தின் (அமெரிக்கா) ஆய்வு ஆனது, RAD52 எனப்படும் DNA பழுதுபார்க்கும் புரதத்தின் எதிர்பாராத அமைப்பை வெளிப்படுத்தியது.
- RAD52 பிரிப்புச் செல்களில் நகலெடுக்கும் DNAவினைப் பாதுகாக்கிறது மற்றும் புற்று நோய் செல்கள் DNA சேதத்திலிருந்துத் தப்பிக்க உதவுகிறது.
- DNA பழுதுபார்ப்பு குறைபாடுகள் உள்ள புற்றுநோய்கள் DNA பழுதுபார்க்கும் காப்புப் பிரதியாக RAD52 புரதத்தினைச் சார்ந்துள்ளன.
- RAD52 புரதம் ஆனது, ஆரோக்கியமான செல்களில் பரவக் கூடியது, ஆனால் BRCA1 மற்றும் BRCA2 குறைபாடுள்ள புற்றுநோய் செல்களின் உயிர் வாழ்விற்கு அவசியம் ஆகும்.
- இந்த ஆய்வு ஆனது கிரையோஜெனிக் எலக்ட்ரான் நுண்ணோக்கியை (CryoEM) பயன்படுத்தி, RAD52 ஆனது DNA-வில் இரட்டை வளைய அமைப்பை உருவாக்குகிறது என்பதைக் காட்டுகிறது.
- தடுப்பான்களைக் கொண்டு RAD52 புரதத்தினை இலக்கு வைப்பது சாதாரண செல்களில் குறைந்தபட்ச விளைவைக் கொண்ட புதிய புற்றுநோய் எதிர்ப்பு மீதான சிகிச்சைகளை வழங்கக் கூடும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 94வது ராம்சர் ஈரநிலம் - கோகபீல் ஏரி




- பீகாரின் கதிஹார் மாவட்டத்தில் உள்ள கோகபீல் ஏரி, ராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தளமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் மொத்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கையை 94 ஆகக் உயர்த்துகிறது.
- கங்கை நதிக்கும் மகாநந்தா நதிக்கும் இடையில் அமைந்துள்ள இந்த ஏரியானது, நதி வளைந்து நெளிந்து செல்லும் தன்மையால் உருவாக்கப்பட்ட ஒரு குதிரைக் குளம்பு வடிவ ஈரநிலமாக செயல்படுகிறது.
- கோகபீல் ஆனது முன்னதாக 2019 ஆம் ஆண்டில் பீகாரின் முதல் சமூக வளங் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.
- சுமார் 30 வலசை இனங்கள் மற்றும் பல அச்சுறுத்தலுக்கு உள்ளான அல்லது எளிதில் பாதிக்கப்படக் கூடிய பறவைகள் உட்பட 90க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் இந்த இடத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- கோகபீல் இதில் சேர்க்கப்பட்டதன் மூலம், பீகாரில் தற்போது ஆறு ராம்சர் தளங்கள் உள்ளன.
- ராம்சர் ஈரநிலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியா ஆசியாவில் முதலிடத்திலும், ஐக்கியப் பேரரசு மற்றும் மெக்சிகோ ஆகியவற்றிற்குப் பிறகு உலகளவில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பிங்க் சஹேலி திறன் அட்டை

- டெல்லி அரசானது, பெண்கள் மற்றும் திருநர்களுக்கு இலவச பேருந்துப் பயணத்தை வழங்க பிங்க் சஹேலி திறன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து பெண்கள் மற்றும் திருநர்களுக்கும் கிடைக்கப் பெறுகிறது.
- இந்த அட்டையை டெல்லிப் போக்குவரத்துக் கழக (DTC) பேருந்துகள் மற்றும் தலைநகர் முழுவதும் உள்ள அனைத்துப் பேருந்துகளிலும் பயன்படுத்தலாம்.




## இந்தியாவின் மிகப்பெரிய எஃகு ஆலை

- ஆந்திரப் பிரதேசத்தின் அனகப்பள்ளி மாவட்டத்தில், எந்தவொரு மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படாத இடத்திலான எஃகு ஆலையைக் கட்டமைப்பதற்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- AM/NS இந்தியா நிறுவனமானது, ஆண்டிற்கு 8.2 மில்லியன் டன் (MTPA) திறன் கொண்ட ஊது உலையை உருவாக்கச் சுற்றுச்சூழல் ஒப்புதலையும் 2,200 ஏக்கர் நிலத்தையும் பெற்றுள்ளது.
- இந்தத் திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் இந்த நிறுவனம் 80,000 கோடி ரூபாயை முதலீடு செய்ய உள்ளது.
- இந்த ஆலையின் செயல் திறன் ஆனது, பின்னர் மொத்தம் 1.5 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டுடன் 24 MTPA ஆக விரிவுப்படுத்தப்படும்.
- ஆர்செலர் மிட்டல் மற்றும் நிப்பான் ஸ்டீல் ஆகியவற்றின் கூட்டுத் துணிகர முதலீடான AM/NS இந்தியா, சத்தீஸ்கரில் உள்ள பைலாடிலா சுரங்கங்களில் இரும்புத் தாதுவை

ஒரு நீர்மக் குழம்பு குழாய் மூலம் பெறுகிறது.




# முக்கிய தினங்கள்

## ஐந்து இந்திய மாநிலங்களின் உருவாக்க தினம் 2025 - நவம்பர் 01




- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 01 ஆம் தேதியன்று, கர்நாடகா, கேரளா, சத்தீஸ்கர், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய ஐந்து இந்திய மாநிலங்கள் அவற்றின் மாநில உருவாக்க தினத்தைக் கொண்டாடுகின்றன.

- இந்த தேதியானது, 1956 ஆம் ஆண்டில் மொழியியல் மற்றும் நிர்வாக அளவுருக்களின் அடிப்படையில் இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதை நினைவுகூருகிறது.
- கர்நாடகா மாநிலம் ஆனது, கன்னட மொழி பேசும் பகுதிகள் இணைக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டில் மைசூரு என்பதிலிருந்து கர்நாடகா என மறுபெயரிடப்பட்டதைக் கொண்டாடும் வகையில் கன்னட இராஜ்யோத்சவத்தைக் கொண்டாடுகிறது.
- கேரள மாநிலமானது மலபார், கொச்சி மற்றும் திருவிதாங்கூர் ஆகியவற்றை இணைத்து 1956 ஆம் ஆண்டில் கேரளாவின் உருவாக்கப்பட்ட தினத்தை கேரள பிறவி தினமாகக் கொண்டாடுகிறது.
- மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரிந்த பிறகு, 2000 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று சத்தீஸ்கர் உருவாக்கப்பட்டது.
- பஞ்சாபிலிருந்து பிரிக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று ஹரியானா உருவானது.
- மத்தியப் பிரதேசம், 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.

## ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் 2025 - நவம்பர் 02




- 2013 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் தேதியன்று மாலியில் இரண்டு பிரெஞ்சுப் பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டதை நினைவு கூரும் விதமாக இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- 1993 ஆம் ஆண்டு முதல், செய்தி மற்றும் தகவல்களைப் புகாரளிக்கும் போது உலகளவில் 1,700க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- யுனெஸ்கோ தரவுகளின்படி, சுமார் 90 சதவீதப் பத்திரிகையாளர்களின் கொலை வழக்குகள் தீர்க்கப்படாமல் உள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Chat GBV: Raising Awareness on AI-facilitated Gender-Based Violence against Women Journalists" என்பதாகும்.

# இதரச் செய்திகள்


## 249-மில்லியன் ஆண்டுகள் பழமையான மீன்




- சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள ஆரம்பகால ட்ரயாசிக் படிவுகளிலிருந்து ஒரு புதிய வகை சீலாகாந்த் மீன் இனத்தை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டு உள்ளனர்.
- இது மடல் துடுப்பு மீன்களின் பண்டைய கால மரபினைச் சேர்ந்தவையாகும்.
- இது சுமார் 249 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பகால ட்ரயாசிக் காலத்தின் ஸ்மிதிய காலத்தில் வாழ்ந்தது.
- இது ஆசியாவில் ஒயிட்டியா இனத்தின் முதல் பதிவாகும்.
- முந்தைய "ஒயிட்டியா" புதை படிவங்கள் மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா, கனடா மற்றும் கிரீன்லாந்தில் கண்டெடுக்கப் பட்டாலும், ஆசியாவில் ஒரு போதும் கண்டு எடுக்கப் படவில்லை.

## மாபெரும் எகிப்திய அருங்காட்சியகம்

- எகிப்தில் சுமார் 7,000 ஆண்டு காலத்திய வரலாற்றைக் கொண்ட சுமார் 100,000 கலைப் பொருட்களைக் காட்சிப்படுத்துகின்ற மாபெரும் எகிப்திய அருங்காட்சியகம் திறக்கப் பட்டுள்ளது.
- முதன்முறையாக, பார்வோன் துட்டன்காமூனின் கல்லறை அவரது தங்க முகமூடி, சிம்மாசனம் மற்றும் இரதங்கள் உட்பட முழுமையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த அருங்காட்சியகம் ஆனது கிசாவில் உள்ள குஃபுவின் பெரிய பிரமிடு அருகே அமைந்துள்ளது.
- முக்கியக் காட்சிப் பொருட்களில் 3,200 ஆண்டுகள் பழமையான, 16 மீட்டர் நீளமுள்ள இரண்டாம் பார்வோன் ராமேசஸின் தூபி, அவரது 11 மீட்டர் உயர சிலை மற்றும் 4,500 ஆண்டுகள் பழமையான குஃபுவின் இறுதிச் சடங்கு படகு ஆகியவை அடங்கும்.


WORLD'S LARGEST ARCHAEOLOGICAL MUSEUM OPENS IN CAIRO
$1 Billion invested, 100,000 artifacts displayed, and 20 Years in the Making...

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆